**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**STC 540/2021** **Date 08/01/2023**

**PW**2 (ரவி த/பெ. பிச்சை) குறுக்கு விசாரணை தொடர்ச்சி: சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை/கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

1 ம் எதிரி தரப்பில்

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். என்னிடம் கையொப்பம் பெற்றதாக கூறப்படும் படிவத்தில் 14/12/2019 அன்று என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். எங்கள் இடத்திற்கு அருகில் உள்ள பள்ளிவாசலில் வைத்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அப்போது என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் ஆபீசர்கள் இருந்தார்கள். அப்போது மாலை 4 மணி இருக்கும். எத்தனை கையொப்பங்கள் இட்டேன் என்றால் இரண்டு அல்லது மூன்று கையொப்பங்கள் இட்டு இருப்பேன். நான் கையொப்பமிட்டதாக கூறப்படும் படிவம் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததா என்றால் ஆமாம். என்னிடம் கையொயப்பம் பெற்றதாக கூறப்படும் போது என் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தருகில் பெட்டி கடை கடந்த ஐந்தாண்டு வருடமாக வைத்து நடத்தி வருகிறேன்.. எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பமிட்டபோது அதிகாரிகளை தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கினை

பற்றி எந்த விபரமும் தெரியாது என்றாலும் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் கையொப்பமிட்டேன் என்றாலும் சரிதான். நான் கையொப்பமிட்டபோது வேறு யாரும் கையொப்பமிடவில்லை என்றால் சரிதான்.

**2 ம் எதிரி தரப்பில்**

2 ம் எதிரி தரப்பிலும் மேற்கண்ட சாட்சியத்தையே ஏற்றுக்கொள்வதாக கூறியதால் அது அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.